**139, Government Polytechnic College ,Uthangarai**



**Bharat Ratna Dr.A.P.J ABDUL KALAM Birth Anniversary 15.10.23**

- வாய்ப்புக்காக காத்திருக்காதே

உனக்கான வாய்ப்பை நீயே ஏற்படுத்திக் கொள்

- நமது பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம்

ஆனால் இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும்

- நம் அனைவருக்கும் ஒரே மாதிரி திறமை இல்லாமல் இருக்கலாம்

ஆனால் அனைவருக்கும் தங்கள் திறமையை வளர்த்துக் கொள்ள ஒரே மாதிரியான வாய்ப்புகள் உள்ளன.

- நம்பிக்கை நிறைந்த ஒருவர் யார் முன்னேயும்,

எப்போதுமே மண்டியிடுவதில்லை

- சிந்திக்கத் தெரிந்தவனுக்கு ஆலோசனை தேவை இல்லை

- இமயத்தின் உச்சியை

எட்டித் தொடுவதாயினும் சரி அல்லது

உன் வாழ்க்கைப் பணியின் உச்சத்தை அடைவதாயினும் சரி ,

மேலே ஏறிச் செல்ல ஒருவருக்கு மிக்க மனவுறுதி தேவைப்படுகிறது

- உலகம் உன்னை அறிவதை விட

உன்னை உலகிற்கு அறிமுகம் செய்து கொள்

- வாழ்க்கையில் ஒருவர் லட்சியத்தை
இலக்கு வைத்து பயணிக்க வேண்டும்....
கனவு மட்டுமே வாழ்க்கை அல்ல..

- அழகைப் பற்றி கனவு காணாதீர்கள்

அது உங்கள் கடமையை பாழாக்கிவிடும்,

கடமை பற்றி கனவு காணுங்கள்

அது உங்கள் வாழ்க்கையை அழகாக்கும்

- ஒரு முறை வந்தால் அது கனவு,

இருமுறை வந்தால் அது ஆசை,

பலமுறை வந்தால் அது லட்சியம்

- சிக்கல்களை எதிர்கொள்ளும் போது

கூடவே பல திறமைகளும் வெளிப்படுகின்றன

- நீங்கள் சூரியனைப் போல் பிரகாசிக்க வேண்டுமானால்

முதலில் சூரியனைப் போல எரிய வேண்டும்

- சும்மா இருப்பதிலும், அற்ப விஷயங்களிலும்

மனதை அலைபாய விடக்கூடாது

என்பதில் விடாப்பிடியாக இருக்க வேண்டும்

- வெற்றி தோல்வி பற்றிய பதற்றம் இல்லாமல் இருப்பதே

வெற்றிக்கான வழி

- உங்களை தூங்க விடாமல்

பண்ணுவது எதுவோ அதுவே கனவு

- ஒரு சிறந்த புத்தகம் நூறு நல்ல நண்பர்களுக்குச் சமம் ,

ஆனால் ஒரு சிறந்த நண்பனோ ஒரு நூலகத்திற்குச் சமம்.

- போர் எந்தக் காலத்திலும்

பிரச்சினைக்கான தீர்வாக இருந்ததில்லை

- எங்கே இதயத்தில் ஆற ஒழுக்கம் இருக்கிறதோ

அங்கே செயல்பாட்டில் அழகு இருக்கும்.

- செயல்களின் மூலம்

நீ உலகத்துடன் அறிமுகம் செய்து கொள்கிறாய்

- வெற்றிக்குத் தான் எல்லைகள் உண்டு ,

முயற்சிக்கு எல்லைகள் இல்லை ,

முயற்சித்துக் கொண்டே இரு

- வாழ்க்கை என்பது.

ஒரு சந்தர்ப்பம்- நழுவ விடாதீர்கள்

ஒரு கடமை- நிறைவேற்றுங்கள்.

ஒரு லட்சியம்- சாதியுங்கள்.

ஒரு சோகம் -தாங்கிக் கொள்ளுங்கள்.

ஒரு போராட்டம் - வென்றுகாட்டுங்கள்.

ஒரு பயணம்- நடத்தி முடியுங்கள்

- உன் கை ரேகையை பார்த்து எதிர் காலத்தை நிர்ணயித்து விடாதே

ஏனென்றால் கையே இல்லாதவனுக்கு கூட எதிர்காலம் உண்டு

- நீங்கள் கனவு காண வேண்டும்

அப்போதுதான் உங்கள் கனவுகள் நனவாகும்.